# அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச மத்தியஸ்த சபைகளின் நிரந்தர இடமின்மை மற்றும் அமைவிடம் சார் பிரச்சினைகள்

**எம். அப்துல் ஜப்பார்[1]**
**பேராசிரியர். ஏ.வி.மணிவாசகர்[2]**

[1]சிரேஷ்ட விரிவுரையாளர், அரசியல் விஞ்ஞானத்துறை
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
jabbarma2009@gmail.com

[2]சிரேஷ்ட விரிவுரையாளர், அரசியல் விஞ்ஞானத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையில் உள்ளூர் மட்டங்களில் ஏற்படும் மக்களது பிணக்குகளை உரிய பிரதேசங்களிலே தீர்க்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் மத்தியஸ்த சபையானது 1988ம் ஆண்டு 72ம் சட்டத்தின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று நாடு முழுவதும் 329 மத்தியஸ்த சபைகள் 8,735 மத்தியஸ்தர்களைக் கொண்டு பிரதேச செயலகப் பிரிவுகளில் செயற்படுகின்றன. இச்சபைகளுக்கு நிரந்தர இடமின்மை மற்றும் பொருத்தமான அமைவிடமின்மை என்பன பாரிய சவால்களாக உள்ளன. இதற்கு அம்பாரை மாவட்ட மத்தியஸ்த சபைகள் விதிவிலக்கல்ல. இதனடிப்படையில் அம்பாரை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச மத்தியஸ்த சபைகளுக்கான நிரந்தர இடமின்மை மற்றும் அமைவிடம் சார் பிரச்சினைகளை ஆய்வு செய்வதாகவும் அதனைத் தீர்ப்பதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதாகவும் இவ்வாய்வு அமைந்துள்ளது. இதற்காக பண்பு மற்றும் அளவு ரீதியான தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் இதற்கான தரவுகள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன. தரவுகளைப் பகுப்பாய்வு செய்ததிலிருந்து ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் மத்தியஸ்த சபைகளின் நிரந்தர இடமின்மை மற்றும் அமைவிடம் சார் பிரச்சினைகள் காரணமாக மத்தியஸ்த சபைகள் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதனை ஆய்வினூடாக கண்டுகொள்ளப்பட்டுள்ளது. அதனால் குறித்த மத்தியஸ்த சபைகளின் செயற்றிறன்மிகு வகிபாகம் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

திறவுச் சொற்கள்: மத்தியஸ்த சபைகள், உள்ளூர்ப் பிணக்குகள், நிரந்தர இடம், அமைவிடம்

## அறிமுகம்

பொதுவாக மத்தியஸ்தம் என்பது ஏதேனும் முரண்பாட்டில் ஒரு மூன்றாம் தரப்பினர் வழங்கும் இடையீட்டுச் செயற்பாட்டினைக் குறிப்பதாகும். இம்மத்தியஸ்தம் தொடர்பான பொதுவான எண்ணக்கருவிலிருந்தே சமுதாய மத்தியஸ்தம் தொடர்பான எண்ணக்கருவுக்கான விளக்கமும் பெறப்படுகின்றது. இது உள்ளூர் மட்டங்களில் செயற்படும் மத்தியஸ்தத்தினைக் குறிக்கும் ஒரு சொல்லாடல் என்றவகையில் குறிப்பிடப்படும் ஒரு எண்ணக்கருவாகும்.

இலங்கையில் 1980ம் ஆண்டு தசாப்தத்தின் இறுதிப் பகுதியில் மக்களது பிணக்குகளை உரிய பிரதேசங்களிலே தீர்க்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் மத்தியஸ்த சபையானது 1988ம் ஆண்டு 72ம் சட்டத்தின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்டது.

1988ஆம் ஆண்டின் 72ம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டத்தின்படி கௌரவ நீதியமைச்சரால் காலத்திற்குக்காலம் வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் மத்தியஸ்த சபைகளுக்குரிய பிரதேசங்கள் குறித்துரைக்கப்படும் என சட்டத்தில் காட்டப்பட்டுள்ளதுடன் தற்போது பிரதேச செயலகப்பிரிவொன்று மத்தியஸ்த சபைப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது (*1988ஆம் ஆண்டின் 72ம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டம்* ப. 2).

இம்மத்தியஸ்த சபையானது நாட்டின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் செயற்படுகின்றது. இன்று நாடு முழுவதும் 329 மத்தியஸ்த சபைகள் 8,735 மத்தியஸ்தர்களைக் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது (மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை, 2016). இதனால் நீதிமன்றங்களுக்கு மக்கள் செல்லும் அளவு குறைந்து உள்ளூர் மட்டத்திலே பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு இச்சபைகள் உள்ளன. இவ்விதம் இலங்கையில் செயற்படும் மத்தியஸ்த சபைகளின் அமைவிடங்களை உரு 01 இல் தெளிவாகக் கண்டுகொள்ளலாம். 1990ம் ஆண்டில் முதன் முறையாக தாபிக்கப்பட்ட மத்தியஸ்த சபைகள் 1992ம் ஆண்டின் போது தீவின் வடகிழக்கு மாகாணங்களின் சில பிரதேசங்களைத் தவிர ஏனைய எல்லாப் பிரதேசங்களிலும் உள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைக்கப்பட்டு மிகவும் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

உரு 01: இலங்கையில் செயற்படும் மத்தியஸ்த சபைகளின் அமைவிடம்



**ஆய்வுப் பிரச்சினை**

இவ்வாய்வானது இலங்கையின் அம்பாரை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச மத்தியஸ்த சபைகளின் நிரந்தர இடமின்மை மற்றும் அமைவிடம் சார் பிரச்சினைகளை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது. இம்மத்தியஸ்த சபைகள் தற்காலிக அமைவிடங்களிலேயே இயங்கி வருவதுடன் அடிக்கடி அமைவிட மாற்றமும் ஏற்படுகின்றமை பல்வேறு சிக்கல்களை உருவாக்குகின்றது.

**ஆய்வு நோக்கம்**

இவ்வாய்வானது அம்பாரை மாவட்ட கரையோரப் பிரதேச மத்தியஸ்த சபைகளின் நிரந்தர இடமின்மை மற்றும் அமைவிடம் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன்படி இம்மத்தியஸ்த சபைகளின் அமைவிடங்களை அறிதல், நிரந்தரமான இடம் இல்லாததால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சபை அமைவிடத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்பவற்றை அடையாளப்படுத்தல் மற்றும் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**


இவ்வாய்வானது பண்பு மற்றும் அளவு ரீதியான தரவுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான தரவுகள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகளாக நேர்காணல் (147), வினாக்கொத்து (600) மற்றும் இலக்குக்குழுக் கலந்துரையாடல் (13), நேரடி அவதானம் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கான மாதிரிகள் எளிய எழுமாற்று மாதிரி மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், முன்னைய ஆய்வுகள், அரசாங்க வெளியீடுகள் மற்றும் புள்ளிவிபரங்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வுப் பிரதேசம்**

இவ்வாய்வில் ஆய்வுப் பிரதேசம் அம்பாரை மாவட்டத்தின் கரையோரப் பகுதியாகும். ஆய்வுப் பிரதேசத்தின் அமைவிடத்தை நோக்கும்போது அது வடக்கு நீலாவணையிலிருந்து தெற்கு குமண வரையான 116 கிலோமீற்றர் நீளத்தைக் கொண்ட பிரதேசத்தையும் கிழக்கே நீண்ட கடல் பரப்புக்களும் மேற்கே அம்பாரைத் தேர்தல் தொகுதியின் எல்லைக்கும் உட்பட்ட பிரதேசத்தையும் நிலப்பரப்பாகக் கொண்டுள்ளது (அம்பாரை மாவட்ட புள்ளிவிபரவியற் தகவல் கைநூல் 2016, ப. 6). இது சுமார் 14 பிரதேச செயலகப் பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வொரு பிரிவிலும் தனித்தனி மத்தியஸ்த சபைகள் செயற்பட்டபோதும் கல்முனை தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதேச

செயலகப் பிரிவுகள் இணைந்த வகையில் ஒரு மத்தியஸ்த சபையே செயற்படுகின்றது. அந்தவகையில் இக்கரையோரப் பிரதேசத்தில் மொத்தம் 13 மத்தியஸ்த சபைகள் இயங்குகின்றன. இதனை வரைபடம் 01 மூலம் அறிந்து கொள்ளலாம்.

**வரைபடம் 01: அம்பாரை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச செயலகப் பிரிவுகள் - 2018**





Digitized Map from Sri Lanka Atles - 2008

2016 ம் ஆண்டின் சனத்தொகையின்படி அம்பாரை மாவட்டத்தில் கரையோரப் பிரதேசத்தில் 473,378 மக்கள் வாழ்கின்றார்கள். இதில் முஸ்லிம்கள் 324,537 பேரும் சிங்களவர்கள் 14,311 பேரும் தமிழர்கள் 129,030 பேரும் ஏனையவர்கள் 5,500 பேரும்

வாழ்கின்றனர் (அம்பாரை மாவட்ட புள்ளிவிபரவியற் தகவல் கைநூல் 2016, ப. 6). இதனைக் கீழுள்ள வரைபடம் 02 காட்டுகின்றது.

**வரைபடம் 02: அம்பாரை மாவட்ட கரையோரப் பிரதேச சனத்தொகை (இன அடிப்படையில்)**




(மூலம்: அம்பாரை மாவட்ட புள்ளிவிபரவியற் தகவல் கைநூல் 2016, ப. 6)

**முடிவும் கலந்துரையாடலும்**

ஆய்வுப் பிரதேச மத்தியஸ்த சபைகளின் கூட்டங்கள் தற்காலிக இடங்களிலேயே இடம்பெறுகின்றன. குறிப்பாக பாடசாலைகள், மத ஸ்தலங்கள், சன சமூக நிலையம் ஆகிய பொதுக் கட்டடங்களே மத்தியஸ்த சபைக் கூட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இக்கட்டடங்கள் மத்தியஸ்த சபைக்கு உரித்தானதாக இல்லாதனால் மத்தியஸ்த சபைகள் தமது விசாரணைகளை நடத்துவதிலும் கூட்டங்களைக் கூட்டுவதிலும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன.

பொதுக் கட்டடங்களில் மத்தியஸ்த சபைக் கூட்டங்கள் நடத்தப்படுவதால் குறித்த கூட்டங்களை நடாத்துவதற்கான அனுமதியினை கட்டடங்களுக்குப் பொறுப்பானவர்களிடமிருந்து பெறவேண்டியுள்ளது. அதேவேளை, மத்தியஸ்த சபைக் கூட்டங்களைப் பொது இடங்களில் நடத்துவதன் மூலம் அங்குள்ள தளபாடங்கள்,

மின்சாரம், மலசல கூட வசதிகள் மற்றும் குடிநீர் போன்றவற்றினை உபயோகிக்க வேண்டியுள்ளது. இது சிலவேளைகளில் குறித்த பொதுக் கட்டட நிர்வாகிகள் தமது கட்டடங்களை வழங்க மறுப்பதற்கும் கட்டடப் பொறுப்பாளர்களுக்கும் மத்தியஸ்த சபைகளுக்கும் இடையே பிணக்குகள் தோன்றி அதன் மூலம் கட்டட அனுமதி மறுக்கப்படுவதற்கும் வாய்ப்புள்ளது.

இதன்படி மத்தியஸ்த சபைகள் தமது ஆளுகைக்குட்பட்ட கட்டடங்களைக் கொண்டிருக்காமையினால் ஒரே இடத்தில் கூட்டத்தினைக் கூட்டுவதிலும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதனால் மத்தியஸ்த சபைகளின் செயற்பாடுகளில் அநாவசியமான காலதாமதம் ஏற்படுத்துவதுடன் மத்தியஸ்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

இதனை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கரையோரப் பிரதேச மத்தியஸ்த சபைகளின் கூட்டங்கள் இடம்பெறும் இடங்களை அடையாளம் காண்பதன் ஊடாக புரிந்துகொள்ளலாம். இதற்கமைய பின்வரும் அட்டவணை 01 கரையோரப் பிரதேச மத்தியஸ்த சபைக் கூட்டங்கள் இடம்பெறும் இடங்களைத் தெளிவாகக் காட்டுகின்றது.

**அட்டவணை 01: கரையோரப் பிரதேச மத்தியஸ்த சபைக் கூட்டங்கள் இடம்பெறும் இடங்கள்**

| இல. | மத்தியஸ்த சபை | ஒன்றுகூடல் இடம் |
|---|---|---|
| 1 | கல்முனை | கமு / சிங்கள மஹா வித்தியாலயம் |
| 2 | சாய்ந்தமருது | கமு / அல் ஹிலால் வித்தியாலயம் |
| 3 | காரைதீவு | கமு / ஆர்.கே.எம். ஆண்கள் மகா வித்தியாலயம். |
| 4 | நிந்தவூர் | கமு / மதீனா வித்தியாலயம். |
| 5 | அட்டாளைச்சேனை | கமு / டொக்டர் ஜலால்தீன் வித்தியாலயம். |
| 6 | அக்கரைப்பற்று | கமு / முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் |
| 7 | ஆலையடிவேம்பு | இ.கி.மி. மகா வித்தியாலயம், அக்கரைப்பற்று. |
| 8 | திருக்கோவில் | திரு / சரஸ்வதி வித்தியாயலயம், தம்பிலுவில். |
| 9 | பொத்துவில் | கமு / அக் மினாஉல் உலூம் வித்தியாலயம். |
| 10 | இறக்காமம் | கமு/அல் அஷ்ரப் மத்திய மகா வித்தியாலயம் |
| 11 | சம்மாந்துறை | சது / முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் |
| 12 | நாவிதன்வெளி | சது / கணேசா வித்தியாலயம், நாவிதன்வெளி |
| 13 | லகுகல | அம் / லகுகல மகா வித்தியாலயம் |

(மூலம்: கரையோர மத்தியஸ்த சபைகளின் புள்ளிவிபரங்கள் 2016)

மத்தியஸ்த சபைகள் தமக்கான நிரந்தர இடத்தைக் கொண்டிராமல் வேறு கட்டடங்களில் பெரும்பாலும் பாடசாலைகளில் இயங்குவதை மேலுள்ள அட்டவணையிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். இவ்வாறு தமக்கான நிரந்தர இடமின்மையால் மத்தியஸ்த சபைக் கூட்டங்கள், பிணக்கு தொடர்பான ஆவணங்களைப் பாதுகாத்தல் என்பது சிரமமான ஒன்றாகவே காணப்படுகின்றது. அதனால் மத்தியஸ்தர்கள் அல்லது சபைத் தலைவர் இவ் ஆவணங்களை தமது வீடுகளுக்குக் கொண்டு செல்கின்றனர். இதனால் ஆவணங்களின் இரகசியத்தன்மை, உறுதித் தன்மை என்பன தொடர்பான சந்தேகங்கள் ஏற்படுகின்றன. மேலும் மத்தியஸ்தர்களின் நடுநிலைமை மற்றும் தீர்வுகள் பற்றிய ஐயமும் ஏற்படுகின்றது.

இவ்வாறே, மத்தியஸ்த சபைக் கூட்டங்கள் பாடசாலைக் கட்டடங்களில் இடம்பெறும்போது பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு பாடசாலையின் ஒரு அறையில் சபை நடவடிக்கைகள் இடம்பெறும்போது அருகிலுள்ள அறையில் வார இறுதி நாட்களுக்கான வகுப்புக்கள் இடம்பெறும். இதன்போது பிணக்காளிகள் தங்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் வெளிநபர்கள் இருக்கும் இடத்தில் பேச தயங்குவர். பிணக்காளிகள், விசாரணைகள், சபை நடவடிக்கைகள் என்பவற்றின் இரகசியம் பேணல் என்பது சிக்கலான ஒன்றாக மாறும் என நேர்காணலின் போது அறிய முடிந்தது.

இங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடிய மற்றுமொரு முக்கிய விடயம் மத்தியஸ்த சபைக் கூட்டங்கள் மேற்குறிப்பிட்ட இடங்களில் இடம்பெறுகின்ற போதும் ஒரே இடத்தில் தொடர்ந்தும் இடம்பெறுவதில்லை. இதனைப் பின்வரும் அட்டவணை 02 மூலம் தெளிவாகக் கண்டுகொள்ளலாம். மத்தியஸ்த சபையினருக்கும் பொதுக் கட்டடப் பொறுப்பாளர்களுக்குமிடையே காணப்படும் முரண்பாடுகள் காரணமாக கூட்டங்களுக்கான இடங்கள் அடிக்கடி மாற்றமுறுவதே இதற்கான காரணமாகும். இதனால் மத்தியஸ்த சபையினை நாடிச் செல்வதில் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அதேவேளை, மத்தியஸ்த சபைகள் தமது கூட்டங்களுக்கான இடமாற்றங்கள் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்துவதுமில்லை. இதனால் கிராமிய மட்டப்

பிணக்குகளைத் தீர்ப்பதில் மத்தியஸ்த சபைகள் செயற்றிறனான வகிபாகம் சவால்களுக்குட்பட்டுள்ளது. இவ்வாறு மத்தியஸ்த சபைக் கூட்டங்கள் இடம்பெறும் இடங்கள் அடிக்கடி மாற்றமுறுதல் பற்றி பொதுமக்களுக்கு தெளிவின்மையால் மத்தியஸ்த சபைகளை நாடிச் செல்வதென்பது குறைவாகக் காணப்படுவதுடன் சிலவேளைகளில் பிணக்கு விசாரணைக்கு சமுகமளிக்காமல் அல்லது உரிய நேரத்திற்கு சமுகமளிக்காமல் விடுகின்றனர். இது அவர்களுடைய பிரச்சனைகளுக்கான தீர்வை எட்டுவதில் காலதாமதத்தை ஏற்படுத்துகின்றது.

**அட்டவணை 02: கரையோரப் பிரதேச மத்தியஸ்த சபைக் கூட்டங்கள் இடம்பெற்ற இடங்கள் (வரிசைக்கிரமமாக)**

| இல. | மத்தியஸ்த சபை | ஒன்றுகூடல் இடம்பெற்ற இடங்கள் |
|---|---|---|
| 1 | கல்முனை | 1. கமு / சிங்கள மகா வித்தியாலயம் |
| 2 | சாய்ந்தமருது | 1. கமு / அல் ஹிலால் வித்தியாலயம் |
| 3 | காரைதீவு | 1. கமு / ஆர்.கே.எம். ஆண்கள் மகா வித்தியாலயம். |
| 4 | நிந்தவூர் | 1. கமு / நிந்தவூர் மஷ்ஹர் பெண்கள் பாடசாலை<br>2. கமு / அல் மதீனா வித்தியாலயம்<br>3. கமு / இமாம் றூமி வித்தியாலயம்<br>4. கமு / அல் பதூரியா வித்தியாலயம்<br>5. கமு / அல் மதீனா வித்தியாலயம் |
| 5 | அட்டாளைச்சேனை | 1. கமு / டொக்டர் ஜலால்தீன் வித்தியாலயம். |
| 6 | அக்கரைப்பற்று | 1. கமு / அக்கரைப்பற்று ஆண்கள் வித்தியாலயம்<br>2. கமு / அக்கரைப்பற்று அல் ஹிதாயா வித்தியாலயம்<br>3. பாலர் பாடசாலை, 3/2 பொது வீதி, அக்கரைப்பற்று<br>4. கமு / முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் |
| 7 | ஆலையடிவேம்பு | 1. இ.கி.தேசியக் கல்லூரி, அக்கரைப்பற்று<br>2. சமூகப் பராமரிப்பு நிலையம், ஆலையடிவேம்பு<br>3. விவேகானந்தா வித்தியாலயம், அக்கரைப்பற்று<br>4. மகாசக்தி கேட்போர் கூடம், அக்கரைப்பற்று<br>5. பெருநாவலர் வித்தியாலயம், கோளாவில்<br>6. களம் நிறுவனக் கட்டடம், அக்கரைப்பற்று<br>7. இ.கி.மி. மகா வித்தியாலயம், அக்கரைப்பற்று |
| 8 | திருக்கோவில் | 1. அர்ணோதய பாடசாலை |

| | | |
|---|---|---|
| | | 2. திரு / சரஸ்வதி வித்தியாயலயம், தம்பிலுவில் |
| 9 | பொத்துவில் | 1. கமு / அக் மினாஉல் உலூம் வித்தியாலயம் |
| 10 | இறக்காமம் | 1. கமு/அல் அஷ்ரப் மத்திய மகா வித்தியாலயம் |
| 11 | சம்மாந்துறை | 1. சது / முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்<br>2. சது / அல் மர்ஜான் மகா வித்தியாலயம்<br>3. சது / முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் |
| 12 | நாவிதன்வெளி | 1. சது / சவளக்கடை விநாயகர் வித்தியாலயம், சவளக்கடை<br>2. சது / கணேசா வித்தியாலயம், நாவிதன்வெளி |
| 13 | லகுகல | அம் / லகுகல மகா வித்தியாலயம் |

(மூலம்: கரையோர மத்தியஸ்த சபைகளின் புள்ளிவிபரங்கள் 2016)

அதேவேளை, சில மத்தியஸ்த சபை கூட்டங்கள் இடம்பெறுகின்ற இடங்கள் பொருத்தமான அமைவிடங்களில் காணப்படுவதற்குப் பதிலாக குறித்த பிரதேசத்தின் எல்லைப் புறங்களில் அல்லது தூரத்தின் அடிப்படையில் மக்கள் மத்தியஸ்த சபையுடன் தொடர்பினை ஏற்படுத்துவதற்கு வசதியாக அமையாத இடங்களில் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதனால் மத்தியஸ்த சபைகளுக்குச் சென்று இணக்கப்பாடுகளை எட்டுதல் என்ற விடயம் புவியியல் ரீதியாக தூரப் பிரதேசத்தில் வாழ்பவர்களுக்கு அசௌகரியமான ஒன்றாகவே காணப்படுகின்றது. போக்குவரத்து செலவு, அதற்கான நேரம், குடும்பப் பொறுப்புக்கள், தொழில் என்பன இதற்குக் காரணமாகின்றன. இதனால் சில பொது மக்கள் தமது உள்ளூர்ப் பிணக்குகளை மத்தியஸ்த சபைக்குச் சென்று தீர்த்துக் கொள்ளுதல் என்ற விடயத்தில் ஆர்வமின்றிக் காணப்படுவதும் இலக்குக் குழுக் கலந்துரையாடலின் மூலம் அறிய முடிந்தது.

எடுத்துக்காட்டாக தெரிவு செய்யப்பட்ட கரையோரப் பிரதேச சில மத்தியஸ்த சபைகளின் கூட்டம் இடம்பெறும் இடத்திற்கும் அம்மத்தியஸ்த சபையினை நாடிவரும் மக்களின் வாழ்விடங்களுக்கும் இடையிலான தூரத்தினைப் பின்வரும் அட்டவணை 03 மூலம் தெளிவாகக் கண்டுகொள்ளலாம்.

**அட்டவணை 03: கரையோரப் பிரதேச மத்தியஸ்த சபைக் கூட்டங்கள் இடம்பெறும் இடங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையிலான தூரம்**

| மத்தியஸ்த சபை | மத்தியஸ்த சபைக் கூட்டம் இடம்பெறும் இடங்கள் | உள்ளடக்கிய கிராமங்கள் | தூரம் (கிலோ மீற்றரில்) |
|---|---|---|---|
| அட்டாளைச்சேனை | டாக்டர் ஜலால்டீன் மகா வித்தியாலயம் | அஷ்ரப் நகர் | 7 கி.மீ. |
| | | ஆலங்குளம் | 7 கி.மீ. |
| | | சம்பூர் நகர் | 6 கி.மீ. |
| | | மீலாத் நகர் | 3 கி.மீ. |
| | | பாலமுனை | 2 கி.மீ. |
| | | தைக்கா நகர் | 3 கி.மீ. |
| | | கோணவத்தை | 1.5 கி.மீ. |
| சம்மாந்துறை | கமு / முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் | மலையடிக் கிராமம் | 2 கி.மீ. |
| | | புளோக் ஜே | 3 கி.மீ. |
| | | உடங்கா நகர் | 02 கி.மீ. |
| | | தமிழ் பிரிவு | 1 கி.மீ. |
| | | வீரமுனை | 2 கி.மீ. |
| | | மல்வத்தை | 8 கி.மீ. |
| | | வளத்தாப்பிட்டி | 10 கி.மீ. |
| | | இஸ்மாயில்புரம் | 12 கி.மீ. |
| | | மல்வத்தை புதுநகர் | 9 கி.மீ. |
| | | மல்லிகைத் தீவு | 11 கி.மீ. |
| | | மஜீட்புரட் | 13 கி.மீ. |
| | | வீரச்சோலை | 9 கி.மீ. |
| | | சொறிக்கல்முனை | 05 கி.மீ. |
| | | நெயினாகாடு | 15 கி.மீ. |
| | | மல்கம்பிட்டி | 10 கி.மீ. |
| | | கல்லரிச்சல் | 2 கி.மீ. |
| | | கருவாட்டுக்கல் | 1 கி.மீ. |
| | | ஏத்தாளைக் குளம் | 7 கி.மீ. |

| | | | |
|---|---|---|---|
| அக்கரைப்பற்று | கமு / முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் (மேற்கு) | அக்கரைப்பற்று கிழக்கு | 2 கி.மீ. |
| | | பறங்கி நகர் | 15 கி.மீ. |
| | | பட்டியடிப்பிட்டி | 3 கி.மீ. |
| | | பள்ளிக்குடியிருப்பு | 5 கி.மீ. |
| | | ஆலிம் நகர் | 8 கி.மீ. |
| | | இசங்கடிச் சீமை | 8 கி.மீ. |
| | | பறகத் நகர் | 10 கி.மீ. |
| | | இலுக்குச்சேனை | 12 கி.மீ. |
| | | வேலமரத்துவெளி | 18 கி.மீ. |
| காரைதீவு | கமு / ஆர்.கே.எம். ஆண்கள் மகா வித்தியாலயம். | மாவடிப்பள்ளி | 5 கி.மீ. |
| | | மாளிகைக்காடு | 2 கி.மீ. |
| பொத்துவில் | கமு / அக் மினாஉல் உலூம் வித்தியாலயம். | சின்ன உல்லை | 4 கி.மீ. |
| | | பசறடிச்சேனை | 8 கி.மீ. |
| | | செங்காமம் | 5 கி.மீ. |
| | | ஆத்திமுனை | 7 கி.மீ. |
| | | மயலகஸ்தோட்டம் | 6 கி.மீ. |
| | | ஊரணி | 5 கி.மீ. |
| | | ஜெய்கா | 5 கி.மீ. |
| | | சிரியா | 5 கி.மீ. |
| | | கோமாரி | 17 கி.மீ |
| | | தாண்டியடி | 18 கி.மீ. |
| | | ஹிதாயா புரம் | 2 கி.மீ. |
| | | ஆர்.எம்.நகர் | 1 கி.மீ.். |
| | | பாக்கியாவத்தை | 1 கி.மீ. |
| | | அல் ஹூதா | 2 கி.மீ. |
| | | களப்புக் கட்டு | 3 கி.மீ. |
| | | ஜலால்தீன் சதுக்கம் | 3 கி.மீ. |
| | | ஐந்தாம் கட்டை | 7 கி.மீ. |

| | | | |
|---|---|---|---|
| | | இன்ஸ்பெக்கடர் ஏத்தம் | 3 கி.மீ. |
| | | குண்டுமடு வட்டிவெளி | 2 கி.மீ. |
| | | சின்ன புதுக்குடியிருப்பு | 2 கி.மீ. |

(மூலம்: பிரதேச செயலக புள்ளிவிபரவியற் தகவல் திரட்டு 2015)

அவ்வாறே, மத்தியஸ்த சபைக் கூட்டங்கள் இடம்பெறும் இடங்கள் நிரந்தரமற்றதாகவும் பொது கட்டடங்களை மையப்படுத்தியதாகவும் அமைவதனால் அவை சுத்தமின்றி காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இது மத்தியஸ்த சபைச் செயற்பாட்டாளர்களுக்கும் பொது மக்களுக்கும் அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றது.

மேலும் மத்தியஸ்த சபைகளுக்கான நிரந்தர இடமின்மையால் தற்காலிக கட்டடங்களில் சபை கூட்டப்படும்போது பொருத்தமான அமைவிடத்தில் அச்சபை கூட்டப்பட வேண்டும். பிணக்காளிகள் தங்களுடைய கருத்துக்களை, பிரச்சினைகளை தயக்கமின்றியும், பயமின்றியும் வெளிப்படுத்தவதற்கான சூழல் காணப்பட வேண்டும். அம்பாரை மாவட்ட கரையோரப் பிரதேச மத்தியஸ்த சபைகளைப் பொறுத்தவரை பொதுவான கட்டடங்களில் கூட்டம் இடம்பெறுவதால் பக்கச்சார்பற்ற முறையில் இணக்கப்பாடு எட்டப்படுவதற்கான வாய்ப்பு தொடர்பில் சில சந்தேகங்களையும் மக்கள் வெளிப்படுத்துகின்றனர். அதாவது இனம், பிரதேசம் போன்ற சூழல் காரணிகள் சிலவேளைகளில் செல்வாக்குச் செலுத்தலாம் என்ற அச்சம் மக்களுக்கு காணப்படுகின்றது.

இவ்வாறான பிரச்சினைகள் காரணமாக மத்தியஸ்த சபைகளின் நடுநிலைமை, வினைத்திறனான இயங்கு நிலை என்பவற்றில் காலதாமதம், தீர்வில் திருப்தியின்மை என்பன ஏற்படுகின்றன.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

அம்பாரை மாவட்ட கரையோரப் பிரதேச மத்தியஸ்த சபைகளின் நிரந்தர இடமின்மை மற்றும் அமைவிடம் சார் பிரச்சினைகள் தொடர்பில் பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பய்வு செய்ததிலிருந்து இவ்வாய்வுக்கான முடிவுரை வரையப்பட்டுள்ளதுடன் அவற்றைத் தீர்த்து

சமுதாய மத்தியஸ்தத்தினை திறம்பட செயற்படுத்துவதற்கான பரிந்துரைகளும் முன்வைக்கப்படடுள்ளன.

ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் மத்தியஸ்த சபைகளின் நிரந்தர இடமின்மை மற்றும் அமைவிடம் சார் பிரச்சினைகள் காரணமாக மத்தியஸ்த சபைகள் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதனை ஆய்வினூடாக கண்டுகொள்ள முடிகின்றது. அதனால் குறித்த மத்தியஸ்த சபைகளின் செயற்றிறன்மிகு வகிபாகம் பாதிப்புக்குள்ளாகியுள்ளது எனலாம். அந்தவகையில் காலதாமதம், தீர்வு, இரகசியத்தன்மை, மத்தியஸ்தரின் நடுநிலைமை பற்றிய சந்தேகங்கள் எழுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் மக்கள் மத்தியஸ்த சபையை நாடி வருவதிலும் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். இப்பிரச்சினைகளைத் தீர்த்து சபை நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்காக பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

கரையோரப் பிரதேச மத்தியஸ்த சபைகள் எதிர்கொள்ளும் மிக முக்கியமானதொரு சவால் அவற்றுக்கான நிரந்த இடம் இல்லாமையாகும். இதனைத் தவிர்ப்பதற்கு அரசாங்கத்தின் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளின் கீழ் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மத்தியஸ்த சபைகளுக்கு உரித்தானதாக போதிய வசதிகளுடன் கூடிய மத்தியஸ்த சபைக் கட்டடங்கள் அமைக்கப்பட முடியும். மேலும் ஆய்வுப் பிரதேசத்தின் பல மத்தியஸ்த சபைப் பிரதேசங்களில் சுனாமிக்குப் பின்னர் இடம்பெற்ற அபிவிருத்திகளின் போது நெக்டெப் (NECDEP) திட்டத்தின் கீழ் பல்தேவைக் கட்டடங்கள் பல உருவாக்கப்பட்டன. இக்கட்டடங்கள் பல பயன்பாடற்ற நிலையிலேயே காணப்படுகின்றன. இக்கட்டடங்களை புனர்நிர்மாணம் செய்து மத்தியஸ்த சபைகளுக்கு ஒப்படைப்பதன் மூலம் அவற்றினை வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியும் (பின்னிணைப்பு - 01). அவ்வாறே, மத்தியஸ்த சபைகளுக்கான முத்திரைக் கட்டணங்களில் அதிகரிப்பினை ஏற்படுத்தி, அதன் மூலம் ஏற்படும் வருமானங்களைக் கொண்டு கட்டடங்களை அமைத்துக்கொள்வதற்கும் வாய்ப்புள்ளது.

மேலும் அமைவிடம் சார் பிரச்சினகளில் முக்கியமானதாக மத்தியஸ்த சபைக் கூட்டம் இடம்பெறும் இடத்திற்கும் கிராமங்களுக்கும் இடையிலான தூர இடைவெளி காணப்படுகின்றது. இதனைத் தீர்ப்பதற்காக இலங்கை நீதித்துறைக் கட்டமைப்பில் காணப்படும் விடயங்களைக் கவனத்திற்கொள்ள முடியும். அதன்படி, நீதவான் நீதிமன்ற

நடவடிக்கைகளில் கைக்கொள்ளப்படும் சுற்றுலா நீதிமன்றம் போன்று சற்றுலா அல்லது நடமாடும் மத்தியஸ்த சபைகளை ஏற்படுத்த முடியும். இவை கூடிய நிலப்பரப்புகளைக் கொண்ட மத்தியஸ்த சபைகளுக்குப் (அட்டாளைச்சேனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, இறக்காமம், லவுகல, காரைதீவு, பொத்துவில்) பொருத்தமானது. இவற்றின் மூலம் வாரம் ஒன்றுக்கு மத்தியஸ்த சபை அமர்வுகளை ஒவ்வொரு பிரதேசத்தில் நடாத்த முடியும். அல்லது வழமையாக சபை இடம்பெறும் அமைவிடத்தில் பிரதான அமர்வை நடாத்துவதுடன் தூரப் பிரதேசங்களில் துணை அமர்வுகளை நடாத்துவதன் மூலம் மக்கள் இலகுவாக பங்குபற்ற முடியும். இதன்மூலம் அமைவிடம் சார் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும்.

**உசாத்துணை**

**நூல்கள்**

Bailey, A & Ngwenyama, O 2010, '*Community mediation and violence prevention through telecentre usage: ICTs mediating the 'Border Line'*, Proceeding of SIG GlobDev Third Annual Workshop, Saint Louis, USA.

Bercovitch, J 1997, 'Mediation in international conflict: an overview of theory, a review of practice' in IW Zartman & JL Rasmussen, 1997, *Peace making in international conflict: methods & techniques*, United States Institute of Peace, Washington, DC.

Boulle, L 2005, *Mediation: principle processes Practice,* LexisNexis Butterworths, Australia.

Coleman, PT, Deutsch, M, & Marcus, EC 2014, *The handbook of conflict resolution: theory and practice,* (3rd eds), Jossey-Bass.

**சஞ்சிகைகள்**

Chereji, CR & Pop, AG 2014, 'Community mediation: a model for Romania', *Transylvanian Review of Administrative Sciences*, no. 41, pp. 56-74.

Fisher, RJ & Keashly, I 1991, 'The potential complementarity of mediation and consultation within a contingency model of third party intervention', *Journal of Peace Research,* vol. 28, no 1, pp. 29-42.

**முன்னைய ஆய்வுகள்**

Jabbar, MA 2009, *The role of third party mediation on rural level community issues. special reference to Ninthaur mediation board in Sri Lanka,* [Unpublished Thesis] Post Graduate Diploma in Conflict Resolution and Peace Preparedness [2007-2009], Department of peace Studies, University of Bradford, United Kingdom.

Toch, CC 2011, *Enhancing community mediation programs for Latinos: incorporating cultural competencies from Oregon and Oaxaca*, M.A. Thesis, Department of International Studies and Graduate School, University of Oregon.

**திருத்தச் சட்டங்கள்**

அரசாங்க வெளியீட்டுத் திணைக்களம் 1988, *1988ஆம் ஆண்டின் 72ம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டம்,* அரசாங்க வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு.

**அரசாங்கத் திணைக்களங்களின் புள்ளிவிபரங்களும் வெளியீடுகளும்**

Department of Census and Statistics, Sri Lanka 2016

Digitalized map from Sri Lanka Atlas- 2018

பிரதேச செயலக புள்ளிவிபரவியற் தகவல் திரட்டு, 2015.

மத்தியஸ்த சபைகளின் தகவல் திரட்டு, 2012 - 2016.

மாவட்ட திட்டமிடல் செயலகம் 2016, *அம்பாரை மாவட்ட புள்ளிவிபரவியற் தகவல் கைநூல்.* மாவட்ட செயலகம், அம்பாரை.

**ஏனைய அறிக்கை**

ஆசிய மன்றம் 2012, *அறிக்கை – 2012*, ஆசிய மன்றம், கொழும்பு.